1992 ஜனவரி 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சீனிவாசன், பொதுவாக தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பற்றி கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் தொகுதிக்கு என்று கேட்டால் அவரிடம் பதில் இருக்காது. இந்த கேள்வியை ஒட்டி துணைக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பின்தங்கியிருக்கின்ற எல்லா தொகுதிக்கும் வரும் என்ற காரணத்தால் கேட்கின்றேன். எங்கள் தொகுதியில் இந்த வாய்ப்புக்கு சிட்கோ நிறுவனத்தார் வந்து பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் ஆரவாரத்தோடு இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே வந்த தொகுதி. ஆகவே அங்குள்ள மக்கள் எல்லோரும் ஆரவாரத்தோடு இங்கும் அங்கும் கொண்டு சென்ற இடங்களைக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலாவது அந்த தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. முஹமது ஆசிப்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி போடவும். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 17. திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

17—

குழந்தைகள் காப்பகத்தில் உடற்பயிற்சி அளித்தல்.

* 5356—**திரு. பி. வி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைப் பருவத்திலிருந்தே உடற்பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் குழந்தைகள் வளர்ப்பில் இதுவரை எந்த அரசும் மேற்கொள்ளாத வகையில் புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அக்கறையைப் பெற்று இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 10 மணியிலிருந்து 11 மணி வரை குழந்தைகளுக்கு 'அவுட் டோர் கேம்ஸ்' மூலமாக உடற்பயிற்சி அளிக்கவேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்றவுடன் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-45

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலில் காலை 10.00 மணியிலிருந்து 11.00 மணி வரையில் அவுட்டோர் கேம்ஸின் மூலமாக குழந்தைகளுக்கு உடற் பயிற்சி அளிக்க அரசு உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்திலே, குறிப்பாக கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில், வேதாரண்யம் தொகுதியிலே, நான், காலை 10-லிருந்து 11 மணி வரையில் அப்படி ஒரு உடற்பயிற்சி நடந்ததை கண்ணால்கூட பார்த்தது கிடையாது. அதற்கேற்ற இன்பிரர்ட்ரக்சர்கூட குழந்தைகள் காப்பகத்தில் கிடையாது. உங்களுடைய நோக்கம் நல்ல நோக்கம்தான். அது முக்கியமாக, நல்லமுறையிலே நடைபெற வேண்டுமென்றால், மத்திய அரசு சமூக நல சேவகர்களுக்கு பத்மபூஷன், பத்மவிபூஷன் விருதுகளை வழங்குகிறது. அப்படிப்பட்டவர்களைத் தலைவர்களாகக் கொண்டு இதனை மானிட்டர் செய்கின்ற ஒரு குழுவை இந்த அரசு நியமிக்குமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் குழந்தைகள் காப்பகத்தில் நடைபெறுவதாக என் கண்ணில் படவில்லை என்று தெரிவித்தார்கள்.

1992 ஜனவரி 30]

உடற்பயிற்சி என்கிறபோது, குழந்தைகளுக்கு காராத்தே போன்றவைகளையும் மற்றவைகளையும் சொல்லிக் கொடுக்க முடியாது. பாரதியார் அவர்கள் 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்று குறிப்பிட்டதைப்போல, குழந்தைகள் காப்பகத்திலே, அந்த குழந்தைகளுக்கு ஓடி விளையாட உடற்பயிற்சி அளிக்க முடியுமே தவிர, இரண்டு வயதிலிருந்து நான்கு வயது வரை இருக்கும் குழந்தைகளுக்கு வேறு உடற்பயிற்சி அளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்தில், அதாவது அரிசன குழந்தைகளும் மற்ற குழந்தைகளும் சேர்ந்து படிக்கின்ற காப்பகத்தில் 70 குழந்தைகளுக்கும், தனித்தனியாக இருக்கின்ற காப்பகத்தில், அதாவது கிராமங்களில் இருக்கின்ற காப்பகத்தில் 50 குழந்தைகளுக்கும், அரிசனக் காலனிகளில் இருக்கின்ற காப்பகத்தில் 70 குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளதாக அறிகின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, அந்தக் குழந்தைகளுக்கு உடற் பயிற்சி அளிப்பது பற்றியது, எண்ணிக்கை பற்றியது அல்ல.

வினா எண் 18, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

18—

ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகளுக்கு வழங்கும் உதவித் தொகையை அதிகரித்தல்.

* 5945—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு அரசு வழங்கும் உதவித் தொகையைக் கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?